செ. குணாளன்

# கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் தொழில் வல்லுநர்கள்

# பினாங்கு மாநிலத்திற்கு வருகை

ஜார்ஜ்டவுன், பிப். 27 - கோலாலம்பூர் மாநகர் மன்றத்தில் பணியாற்றும் பல்வேறு துறைகளின் தொழில் நிபுணர்களும் துறை சார்ந்த வல்லுநர்களும் உள்ளடக்கிய 20 பேர் கொண்ட குழுவினர், பினாங்கு மாநில மாநகர் மன்றத்திற்கு மரியாதை நிமித்தமாக வருகை புரிந்தனர்.

வடிகால் திட்ட அமைப்பு பிரிவு, சாக்கடை, நதிநீர் திட்டப் பிரிவு, இடையூர் தணிப்புப் பிரிவு ஆகிய துறைகளைச் சார்ந்த தொழில் வல்லுநர்களும் நிபுணர்களும் தலைநகர் மாநகர் மன்றத்தின் வடிகால் திட்டப் பிரிவின் துணைத் தலைமை இயக்குநர் நோர் ஷப்ரி பின் பித்தா தலைமையில் வருகை மேற்கொண்டனர்.

இக்குழுவினரை வரவேற்ற மாநில மாநகர் மன்றத்தின் பிரதிநிதிகள், அவர்களோடு கருத்துப் பரிமாற்றக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இதில், திடீர் வெள்ள பாதிப்புகளுக்கெதிரான முன் எச்சரிக்கை திட்டங்கள், அவற்றுக்கான விவேகத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக விரிவான விவாதங்கள் நடைபெற்றன.



மாநில மாநகர் மன்றத்தின் பொறியியல் துறையின் மூத்த பொறியாளர் முகமட் நஸ்ருல் நிஸாம் பின் நஸ்ரி, வெள்ளப் பிரச்சினைகளை சமாளிக்கும் பல்வேறு உத்திகள் குறித்து உரையாற்றினார்.

இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் மாநில மாநகர் மன்ற நகர்ப்புற சேவைத் துறையின் அணித் தலைவர் முகமட் சம்சூரி பின் ஹுசேன், நிவாரண உத்திகள் பிரிவின் தலைமை அணித் தலைவர் ஃபாரிஸ் ஐமான் நோராஷிடி ஆகியோரும் பங்கேற்றனர். இரு தரப்பினருக்கும் இடையேயான இந்த கலந்துரையாடல் எதிர்பார்த்த இலக்கை எட்டியதாக கூறப்பட்டது.